www.ecourtsindia.com



Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure)

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | SESSIONS JUDGE,<br>MAHILA COURT,<br>CHENGALPATTU. |

Calender ..

Miscellaneous ..

Preliminary Register ..

Sessions .. SC.No. 213/2022

Prosecution .. P.W.2

Deposition of Witness for

Court

Name :..திரு.சங்கர்

Father’s Name :.. திரு.பாலசுப்பிரமணியன் Caste :..

Village : Religion :..

Taluk : Age :..

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.11.2024.

**சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**அ.சா. 2 முதல் விசாரணை-**

**( எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. இ.குமரகோட்டி ஆஜரில் இருந்தார். )**

என் பெயர் சங்கர். என் தந்தையின் பெயர் பாலசுப்பிரமணியன். நான் தற்போது நெ.28, ஏ.ஹச் பிளாக் , பல்லக்குமானியம் நகர், மயிலாப்பூர், சென்னை என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் தனியார் கம்பெனியில் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், 1 வது எதிரி லாரன்ஸ், 2 வது எதிரி ரீட்டா மேரி.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG020015822022-orderno-2.pdf

27.10.2010 ம் தேதி என் தங்கை ரேவதியை 1 வது எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்தோம். அவர்களுக்கு வரதட்சணையாக 12 சவரன் நகையும், 150 சி சி பல்சர் பைக் , வீட்டுக்கு தேவையான சீர்வரிசை சாமான்களை கொடுத்தோம். திருமணமான பிறகு 1 வது எதிரி வேலைக்கு போவதில்லை. தினமும் குடித்துவிட்டு வந்து என் தங்கை ரேவதியை அடித்து துன்புறுத்தி வந்தார். கொஞ்ச நாள் கழித்து 1 வது எதிரி குடிக்கு அடிமையானவர் என்ற சிகிச்சை அட்டை என் தங்கை ரேவதியிடம் கிடைத்தது. இதை பற்றி என் தங்கை அவர் மாமியார் 2 வது எதிரியிடம் கேட்ட போது இதை பற்றி வெளியே சொன்னால் உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். இதை பற்றி என் தங்கை என் அப்பாவிடம் போன் செய்து சொன்னார். அதற்கு என் அப்பா நீ கிளம்பி இங்கே வந்து விடு என்று என் தங்கையிடம் சொன்னார். அதன்பின்னர் என் தங்கை ரேவதி எங்கள் வீட்டிற்கு கிளம்பி வரும் போது 1 வது எதிரியும், 2 வது எதிரியும் என் தங்கையை வீட்டின் உள்ளே இழுத்து போட்டு அடித்தார்கள். 31.12.2010 ம் தேதி இரவு 11.30 மணிக்கு மறுபடியும் 1 வது எதிரியும், 2 வது எதிரியும் என் தங்கையை அடித்து உன்னை வெளியே விட்டால் தானேஅனைத்தையும் சொல்லுவாய் என்று கத்தியால் 1 வது எதிரி என் தங்கையை வெட்ட வந்தார். அதன்பின்னர் என் தங்கை 1 வது எதிரியையும் 2 வது எதிரியையும் தள்ளிவிட்டு ஆட்டோ பிடித்து எங்கள் வீட்டிற்கு வந்தார். அதன்பின்னர் என் தங்கை பதட்டத்தில் இருந்ததால் 06.01.2011 ம் தேதி பள்ளிக்கரணை காவல் நிலையத்தில் இது சம்மந்தமாக என் தங்கை ரேவதி புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல, என் தங்கை என்னிடம் சொல்லியிருக்கிறார். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG020015822022-orderno-2.pdf

www.ecourtsindia.com
www.ecourtsindia.com
www.ecourtsindia.com
www.ecourtsindia.com
www.ecourtsindia.com
www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG020015822022-orderno-2.pdf